24.02.2026

OS No: 133/2015

வா.சா. 1 - பூங்கோதை க/பெ. விஸ்வநாதன்

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வா.சா.ஆ.6 ஆவணமானது யாரிடமிருந்து நான் பெற்றேன் என்றால் என்னிடம் தான் இருந்தது. பாஸ்போர்ட் குறித்து பிராதில் சங்கதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பாஸ்போர்ட்டில் குறிப்பிட்ட விவரங்கள் எனக்கு படிக்க தெரியாது என்றால் படிக்க தெரியாது. பாஸ்போர்ட்டில் சண்முகம் மகன் நாதன் என்ற விஸ்வநாதன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வாசாஆ.6 ல் நாதன் என்று தான் கையெழுத்து செய்து படம் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாதன் என்பவரும் நாதன் என்ற விஸ்வநாதன் என்பவரும் ஒரே நபர் தான் என்பதை காட்டிட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாசாஆ.6 ன் படி நாதன் என்பது சரியான பெயர் என்றும், விஸ்வநாதன் என பெயர் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நாதன் வெளிநாட்டில் என்ன வேலை பார்த்தார் என்றால் கொத்தனார் வேலை பார்த்தார். நாதன் என்பவருக்கு வெளிநாட்டில் எவ்வளவு சம்பளம் என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.7 வரி ரசீது எந்த வீட்டிற்குரியது என்றால் நான் குடியிருக்கும் வீட்டிற்குரியது. வா.சா.ஆ.7 ல் நான் குடியிருக்கும் வீட்டிற்கு கதவு எண் என்ன என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.7 ல் கண்ட இடத்திற்குரிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.7 வீட்டு வரி ரசீது கண்ட வீட்டின் நீள, அகலம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணம் திருமண அழைப்புதல் குறித்து எனது பிராதில் சங்கதி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி வா.சா.ஆ.8 ல் ராஜஜோதி என்பவர் என்னுடைய மகள் அல்ல என்றால் எனது நேரடி மகள் அல்ல, எனது அக்கா மகள் ஆவார். வா.சா.ஆ.8ல் மாமன் அத்தை என உறவு முறை குறித்த பிரிவு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி உறவுமுறை பிரிவில் குறிப்பிட்ட விஜயா என்பவர் தாவா வழக்கின் 4ம் பிரதிவாதி என்றும், அவரது கணவர் பெயர் லெட்சுமணன் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி லெட்சுமணன் இளநிலை

பொறியாளர், நெடுஞ்சாலை துறை வேலை பார்த்தார் என்றும், அது அரசு வேலை என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ.8ன் படி திருமணம் கோவிலில் நடைபெற்றது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் குறித்த விவரம் வாசாஆ.8ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 புகைப்பட ஆல்பமானது யாரால் எடுக்கப்பட்டது என்பதை காட்டிட சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ.9க்கான செலவு குறித்த பில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கும் எனக்கும் உள்ள உறவுமுறையின் அடிப்படையில் அவருக்கு தாவா சொத்து கிரையம் கொடுத்துவிட்டு தற்போது மேற்படி கிரையம் செய்யவில்லை என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை 4ம் பிரதிவாதிக்கு 2008ல் கிரையம் கொடுத்தேன் என்றால் ஏமாற்றி பெற்றுக் கொண்டார்கள். நானும் எனது மகனும் தாவா சொத்தை 4ம் பிரதிவாதி ஏமாற்றி கிரையம் பெற்றதாக சொல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் கொடுத்துள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக காட்டிட எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், புகார் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தின் அடிப்படையில் எனது மகன் மேஜரான 3 வருடத்திற்குள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதால் எனது பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மகன் தாவா சொத்தை ஏமாற்றி கிரையம் பெற்றதாக சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.02.24 15:44:45 +0530